# ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் தகவல் தொடர்புதுறையில் கணித்தல் குறித்து தேசிய அளவிலான கருத்தரங்கம்





சென்னை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் கல்லூரியின் கனினிதுறை மற்றும் இந்திய கனினி சமுதாயம் இணைந்து தகவல் தொடர்புதுறையில் கணித்தல் குறித்து புதுமையான கண்டுபிடித்தல் பற்றிய தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் கனினித்துறையின் தற்கால வளர்ச்சிகளையும் புதுமை களையும் மாணவர்களுக்கு எடுத்து ரைத்து, அவர்களை ஆராய்ச் சிதுறையில் ஈடுபட ஊக்குவிப்பதே இக்கருத்தரங்கின் நேக்கமாகும், மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் இதில் பங்கேற்று தங்களது ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்கினர்.

இதில் சிறப்பு விருந்தினராக சி.ஒய்.எஸ்.ஐ தலைவர் கபாலீஸ்வரன், என்.கா சி.ஒய்.எஸ்.ஐ வாழ்நாள் உறுப்பினரும், சைபர் சட்டத்தின் முன்னனி பயிற்சியாளருமான என்.கார்த்தி கேயன், ஸ்ரீ சாய்ராம் கல்வி குழுமத் தலைவர் சாய்பிரகாஷ் லியோமுத்து, கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், கனினிதுறை தலைவர் லதா உட்பட ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். கருத்தரங்கின் இறுதியில் சைபர் பாதுகாப்பும் அதன் சவால்களும் என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.